[30th January 1963

திரு. கே. ஏ. மதியழகன் : அப்படியானால் லஞ்ச ஊழல்கள் எதுவுமே இல்லை, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று சர்க்கார் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் நினைப்பதுபோல் லஞ்ச ஊழல்கள் எந்த இடத்திலும் இல்லை என்று அரசாங்கம் கருதவில்லை, லஞ்ச ஊழலைத் தவிர்ப்பதற்கு இது முறை அல்ல என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஜே. மாதா. கவுடர் : லஞ்ச ஊழல்களைத் தடுப்பதற்கு சர்க்காரிலே எக்ஸ் பிரான்ச் உத்தியோகஸ்தர்கள் திறம்பட வேலை செய்கிறார்கள் என்று கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினருக்கு தெரிந்தது அரசாங்கத்திற்கு அவ்வளவு தெரியாமல் இருக்கலாம். இருந்தாலும் அரசாங்கத்திற்கு ஓரளவு தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : அப்படியானால் மத்திய சர்க்காரிலே இதற்காக "சந்தானம் கமிட்டி" என்று ஒன்று ஏற்படுத்தினார்களே, அது தேவை இல்லாத கமிட்டி என்று சர்க்கார் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்கார் சந்தானம் கமிட்டியைப்போட்டிருப்பது லஞ்ச ஊழலை அடியோடு தவிர்ப்பதற்கு வேறு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆராய்ந்து சிபார்சு செய்வதற்காகத்தான். ஆனால் கனம் அங்கத்தினர் சொல்வது வேறு விஷயம்.

வயது வரம்புச் சலுகை

* **கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. முனு ஆதி சார்பில்)** : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க அலுவலகங்களில் சேருவதற்கென வைக்கப்பட்டுள்ள, உச்சவயது வரம்பினை, மாற்றியமைக்கும் உத்தேசமுண்டா ?

(இ) இது குறித்து, பிற்பட்ட வகுப்பினர்களுக்கு (Backward Communities) அளிக்கப்பட்ட சலுகை தற்பொழுது நிறுத்தப்பட்டு விட்டதா ?

(உ) ஆம் என்றால், அங்ஙனம் நிறுத்தப்பட்டதன் காரணம் என்ன ?

(எ) மீண்டும் அத்தகைய சலுகை அளிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) and (*b*) : No.
(*c*) and (*d*) Do not arise.